**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120225095

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.04.2022

Accepted: 12.06.2022

Published: 01.07.2022

Citation:
Sudha, and N. Stalin. "Poetry Techniques in J. Francis Kruba's Poems." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 60–63.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15095.

*Corresponding Author:
q2stalin@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Poetry Techniques in J. Francis Kruba's Poems

**Dr. S. Sudha**
*Associate Professor, Department of Tamil*
*Government Arts College (Autonomous), Karur, Tamil Nadu, India*

**N. Stalin**
*Full-time Ph.D. Researcher, Department of Tamil*
*Government Arts College (Autonomous), Karur, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0001-7681-0681*

**Abstract**

We know that there are many methods for traditional poetry through texts such as Tolkappiyam, Thandiyalankaram etc. But the literature of this period, the new and modern poetry, does not seem to have clear, systematic strategies. Even if there is an idea that modernity is bound by traditions, it is not too much if it survives from the roots of traditions. Strategies for choosing language to express ideas. Strategy is the method of conveying. Choosing literature in language and choosing poetry in that literature is the same strategy. The strategy occupies a unique place in the mind of the readers as it takes the idea to imprint it deeply. In this way, the techniques found in the poems of the poet J.Francis Kruba, who has a special place for himself in the modern poetry literature, can be seen through this article.

**Key Words:** J.Francis Krupa, Poetry Techniques, Traditional Poetry, Modern Poetry, Creative Literature.

**References**

1. Francis Kiruba. J. 3rd Short Edition 2018. *J. Francis Kiruba Kavithaikal (Poems)*, Chennai, Discovery Book Palace (P) Ltd.,

# ஜெ. பிரான்சிஸ் கிருபா கவிதைகளில் உத்திகள்

***முனைவர் சா. சுதா***
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர்

***ந. ஸ்டாலின்***
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத் துறை,அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*மரபுக் கவிதைகளுக்கு தொல்காப்பியம், தண்டியலங்காரம் போன்ற அணியிலக்கண நூல்களின் வழியாகப் பல உத்தி முறைகள் இருப்பதனை அறிகிறோம். ஆனால், இக்கால இலக்கியங்களான நவீனக் கவிதைகளுக்குத் தெளிவான, முறையான உத்திகள் இருப்பதாகத் தெரியவில்லை. மரபுகள் கட்டுடைக்கப்பட்டது தான் நவீனம் என்ற கருத்து இருந்தாலும் கூட மரபுகளின் வேரில் இருந்து தான் அது பிழைத்துக்கொண்டு இருக்கிறது கருத்தினைப் புலப்படுத்த மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன உத்திகள். தான் எடுத்து ரைத்து உணர்த்தும் முறையைத்தான் உத்தி என்பர். மொழியில் இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதும் அவ்விலக்கியத்தில் கவிதையைத் தேர்வு செய்ததும் உத்தி முறையேயாகும். வாசிப்போரின் மனதில் அக்கருத்தினை ஆழமாகப் பதிவிடச் செய்திட எடுத்துக்கொண்ட முறையில் உத்தி தனித்த இடம் வகிக்கின்றது. அவ்வகையில் நவீனக் கவிதை இலக்கியத்தில் தனக்கெனத் தனியிடம் பிடித்த கவிஞர் ஜெ. பிரான்சிஸ் கிருபாவின் கவிதைகளில் காணலாகும் உத்திகளை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.*

***முக்கியச் சொற்கள்:*** *ஜெ. பிரான்சிஸ் கிருபா, கவிதை உத்திகள், மரபுக் கவிதை, நவீனக் கவிதை, படைப்பிலக்கியம்.*

**உத்தி என்பதன் விளக்கம்**

ஆங்கிலத்தில் ‘டெக்னிக்’ என்னும் சொல்லால் இவ்வுத்தி நிலை குறிக்கப்படுகின்றது. உந்துதல், பொருத்துதல் என்ற வினை அடிப்படையில் பாடுபொருளைக் கவிஞன் பொருத்தமுற வெளியிடும் பாங்கு அல்லது முறை உத்தி என்பதாகக் கொள்ளப்பட்டது. இந்தத் தனிச்செயல் முறை நுணுக்கத்திறம் பலவகைகளாக விரிந்து வெளிப்படுவதனை இலக்கியக் கலைச்சொல் அகராதிகளும் இலக்கியத் திறனாய்வு நூல்களும் இலக்கியக் கோட்பாட்டு ஆய்வுகளும் காட்டுகின்றன. ஒவ்வொரு கவிஞனின் தனித்தன்மையும் இவ்வுத்திகளைக் கையாளும்முறையில் வெளிப்படுகின்றது.

மரபு உத்திகளைப் பயன்படுத்தலும் புதுவகை உத்திகளை உருவாக்குதலும் என இரு அடிப்படை நிலைகள் அமைய வாய்ப்பு ஏற்படுகின்றது. இலக்கியத் திறனாய்வின் நோக்கமே படைப்பாளனின் உத்திகளை இனம் கண்டுகொள்வதில் தான் நிறைவுறுகிறது எனும் எண்ணம் உத்தி பற்றிய ஆய்வின் முதன்மையை உணர உதவுகிறது. படைப்பாளனின் தனித்தன்மைக்கு ஏற்பவும், படைப்பாற்றலுக்கு ஏற்பவும் உத்திகள் உருவாகியும் பெருகியும் அமைவதனால் உத்தி பற்றிய கொள்கைகள் கட்டுப்பட்ட வரையறைக்கு அப்பாற்பட்டுச் செல்கின்றன.

உத்தி முறைகளில் உவமை, படிமம், குறியீடு, முரண், இருண்மை ஆகிய உத்திகள் இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### உவமை

தெரிந்த பொருளைக்கொண்டு தெரியாத பொருளைக் குறித்து உணர்த்துவது உவமையாகும்.

**வேளி நதியில்**
**சிறகின் துடுப்பிசைத்து**
**எதிர்வரும் வண்டை**
**நான்**
**கண்டுகொண்டிருப்பது**
**எந்தப் பூவின் கனவோ?**

**(பி.கி.கவிதை - ப.20)**

என்னும் கவிதையில் எதிர்வருகின்ற வண்டானது கவிஞரின் பார்வையில் பூவின் கனவிற்கு உவமையாகின்றது.

**பெண்ணைக் கண்டு**
**பேரிரைச்சலிடுகிறாயே மனமே**
**பெண் யார்?**
**பெற்றுக் கொண்டால் மகள்**
**பெறாதவரையில்**
**பிரகாசமான இருள்**
**வேறொன்றுமில்லை**

**(பி.கி.கவிதை - ப.89)**

இதில் பெண்ணின் பெண்மையையும் தாய்மை உணர்வையும் மகப்பேற்றின் வாயிலாகப் பிரகாசத்தின் இருள் எனப் புனித உவமையாக்குகிறார்.

### படிமம்

உவமை, உருவகம் என்பன மென்மேலும் இறுகிய நிலையில் தான் படிமம் என்றவொன்று தோன்றுகிறது. முற்று உருவகப் பாங்கில் அமைந்து தெள்ளத்தெளிவான அக்காட்சியினை வழங்குகின்ற பேராற்றல் உடையதே படிமமாகும்.

**புல்லின் தளிர்விரல் நுனியில்**
**பனிக்காலம்**
**கட்டிமுடித்தகண்ணாடித் தீவுக்கு**
**விளக்கேற்றுகிறதுஒரு**
**விடிவெள்ளியின் முகம்**

**(பி.கி.கவிதை - ப.15)**

என்னும் வரிகளில் புல்லில் படர்ந்த பனித்துளிக்கு ஒளிகொடுக்கும் நிலவு இங்குப் படிமமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மெழுகின் உருகுதலைப் பகலொடு சொல்லி இரவின் நிலையை இருளாக்கிக் காட்சிப்படுத்தியிருப்பதை,

**பகலில் எரியும்**
**மெழுகுவர்த்தியின் திரியிலிருந்து**
**சுருள் சுருளாய் விரிகிறது**
**இருள்**

**(பி.கி.கவிதை - ப.23)**

என்ற வரிகளில் காணலாம்.

### குறியீடு

தன்னோடு தொடர்புடைய, நெருக்கமான பொருளைக் குறித்த உணர்வினைக் குறியீடு தோற்றுவிக்கிறது. சொல் என்பதே குறிப்பிட்ட பொருள்களை உணர்த்தும் குறியீடாகும். மற்றொன்றிற்காகச் சுட்டிக் காட்டுவதும் செயல்படுவதுமாக இருப்பதே குறியீடாகும்.

இதனை தொன்மம், இயற்கை, வரலாறு, இலக்கியக் குறியீடு எனும் நிலைகளில் வகைப்படுத்தலாம்.

**“லிர்க்கச் சிலிர்க்க அலைகளை மறித்து**
**முத்தம் தரும் போதெல்லாம்**
**துடிக்கத் துடிக்கஒரு மீனைப்பிடித்து**
**அப்பறவைக்குத் தருகிறது**
**இக்கடல்**

**(பி.கி.கவிதை - ப.25)**

எனும் கவிதையில் இயற்கை சார்ந்த குறியீட்டின் வாயிலாக, பசியின் வேட்கையினை வாசகர்களுக்குப் பரிமாறுகின்றார் கவிஞர்.

### முரண்

ஒரு சொல்லோ பொருளோ அல்லது நிகழ்வோ ஒன்றுக்கு ஒன்று எதிராக முன்னுக்குப் பின்னாக அமைந்திருப்பது முரணாகும். மரபில் இதனை, முரண் தொடை என்பர்.

சொல் முரண், பொருள் முரண், நிகழ்ச்சி முரண் என இதனை வகைப்படுத்தலாம்.

***விளக்கின் உடைவெளிச்சமாய்***
***அரவமின்றிப் படபடத்தது காற்றில்***
***உதடுகுவித்து***
***ஊதிக் களைந்தேன்***
***விளக்கின் ஆடைகளை***
***அறைமுழுக்கப்***
***பெருகிப் பிரகாசித்தது***
***இருளின் நிர்வாணம்***

***(பி.கி.கவிதை – ப.295)***

என்னும் கவிதையில் விளக்கினை ஊதியபின் இருளாய் இருக்கும் அறை பெருகிப் பிரகாசித்ததாய்ச் சொல்லப்படுவதே இங்குப் பொருள் முரணாய் அமைகிறது.

### இருண்மை

இருண்மை என்பது கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் முழுமையாக நடைபெறாத நிலையைக் குறிப்பதாகும். ஒரு படைப்பு, படிப்பவர்களின் அறிவுக்கும் அனுபவத்துக்கும் உணர்வுக்கும் ஏற்றவகையில் ஒரேயொரு பொருளை மட்டும் தராமல் வெவ்வேறு பொருள்களைத் தந்தமைவது இருண்மையாகும்.

***மழைக்குத் தெரியாமல்***
***குடைக்குள் புன்னகைக்கிறாய்***
***கண்ணடித்து மன்னிக்கிறது மின்னல்***

***(பி.கி.கவிதை – ப.189)***

வெளிப்படையாக மழை, குடை, மின்னல் என்ற பொருள் தெரிந்தாலும், யாருக்கும் தெரியாத காதலை மனதிற்குள் வைத்துப் புன்னகைக்கும்பொழுது காட்டிக்கொடுத்து விடுகிறது முகம் என அகத்தின் அழகு முகத்தில் படர்வதைத் தெளிவாக்கியிருக்கிறார் கவிஞர்.

### முடிவுரை

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான படைப்பு, இலக்கியங்களில் தனக்கெனத் தனித்த இடமொன்றினைத் தக்கவைத்துக்கொண்டு மிளிர்ந்துகொண்டு இருக்கிறது. அவ்வகையில் இக்காலத்தில் தன்முனைப்போடு இயங்கக்கூடிய நவீனப் படைப்பாளர்கள் புதுமையை இலக்கியத்தில் புகுத்துகின்ற நோக்கத்தில் முனைப்போடு செயலாற்றுகின்றனர். அவ்வகையில் அவர்கள் மரபின் தொடர்ச்சியை தம் படைப்புகளில் வைத்துச் செயல்படுவது சிறப்புக்குரியதாகும்.

### துணைநூற்பட்டியல்

1. பிரான்சிஸ் கிருபா. ஜெ. மூன்றாம் பதிப்பு 2018. *ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகள்* சென்னை, டிஸ்கவரி புக் பேலஸ்.